அ.வ.எண்.179/2017 நாள்: 04.02.2026

பி.சா. 1 திரு.மணிவண்ணன்

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) தாவா சொத்துக்களை முதன்முதலாக துரைசாமி நாட்டார் என்பவருக்கு எந்த ஆண்டு அரசினால் குத்தகைக்கு விடப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் 1954 முதல் 1959 வரை குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. மேற்படி துரைசாமி நாட்டார் எந்த வருடம் இறந்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி துரைசாமி நாட்டார் 1965 ஆம் ஆண்டு இறந்துவிட்டார், அவர் இறந்து 61 ஆண்டுகள் ஆகியும் இதுவரை துரைசாமி நாட்டார் மகன்களான நாகராஜன் நாட்டார், காசிநாதன் நாட்டார், ராமதாஸ் நாட்டாரின் வாரிசுகள், ராஜமாணிக்கம் நாட்டார் வாரிசுகள், சுவாமிநாதன் நாட்டார் வாரிசுகள் ஆகியோர்களின் அனுபவித்தில் வழக்கு சொத்துக்கள் இதுநாள்வரை இருந்து வருகிறது என்றால் சரிதான், சட்டவிரோதமாக அனுபவம் செய்து வருகிறார்கள்.

2) என்னிடம் காட்டப்படும் மின்னனு சலானிலுள்ள கணக்கு தலைப்பு எங்களது அலுவலகத்திற்கு உரியதுதானா என்றால் அலுவலகத்திலுள்ள ஆவணங்களை பார்த்தால்தான் கூறமுடியும். பொதுபணித்துறைக்கு சொந்தமான நிலம் திருவையாறு மற்றும் பூதலூர் தாலுக்காவில் எத்தனை ஏக்கர் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது என்றால் அலுவலகத்திலுள்ள ஆவணங்களை பார்த்தால்தான் கூறமுடியும். வா.சா.ஆ.15–ல் திருக்காட்டுப்பள்ளி, சர்.சிவசாமிஐய்யர் உயர்நிலைப்பள்ளிக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். மேற்படி பள்ளியில் விவசாயம் தொடர்பான பாடம் கற்பிப்பதற்காக மேற்படி விவசாய நிலம் குத்தகைக்கு விடப்பட்டிருந்தது என்றால் சரிதான்.

3) மேற்படி பள்ளியில் விவசாய கல்வி போதிக்கப்படுவது நிறுத்தப்பட்டு 15 ஆண்டுகளுக்கும் மேல் ஆகிறது என்றால் எனக்கு தெரியாது. பொதுப்பணித்துறை வெண்ணாறு கோட்டம், பொதுப்பணித்துறைக்கு சொந்தமான திருவையாறு மற்றும் பூதலூர் தாலுக்காவிற்கு உட்பட்ட நிலங்களை 44 நபர்களுக்கு குத்தகைக்கு விட்டுள்ளார்கள், அவர்கள் யாரையும் சட்டப்படி வெளியேற்றுவதற்கு எங்கள் துறை நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் அது எங்களது கோட்டம் அல்ல என்பதால் அது குறித்து என்னால் பதிலளிக்க இயலாது.

4) மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றம் மதுரை அமர்வில் சர்.சிவசாமிஐய்யர் உயர்நிலைப்பள்ளி சார்பாக ஒரு ரிட் மனு தாக்கல் செய்து பொதுப்பணித்துறைக்கு சொந்தமான பள்ளி அனுபவத்திலுள்ள நிலத்திற்கு குத்தகை நிர்ணயம் செய்து தரும்படி கேட்டிருந்ததில் தஞ்சை மாவட்ட ஆட்சியர் தலைமையில் இருதரப்பினரையும் விசாரித்து உரிய குத்தகை நிர்ணயம் செய்து தரவேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருந்த விவரம் தெரியுமா என்றால் அது தொடர்பான ஆவணத்தை அலுவலகத்தில் பார்த்தால்தான் கூறமுடியும். மேற்படி கோரிக்கைக்காக வாதி தரப்பில் மனு கொடுத்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றால் ஆவணத்தை பார்த்தால்தான் கூறமுடியும்.

வாதிதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

S.d/ Manivannan

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.02.04 17:04:27 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU